சங்கரகிரந்தாவலி 112 புஸ்தக நெ. 5.

உ

ஸ்ரீகுருப்யோ நம:

108

ஸ்ரீமத் பரமஹம்ஸ பரிவிராஜகாசாரிய

ஸ்ரீ சங்கராசாரியஸ்வாமிகள் GL No 14558

அருளிச்செய்த

# பிரச்நோத்தரரத்நமாலிகா

மூலமும்

தஞ்சை

## ஸ்ரீலஸ்ரீ பிரஹ்மாநந்தஸ்வாமிகள்

அருளிச்செய்த உரையும்.

தஞ்சை K. H. ஸ்கூல் சமஸ்கிருதபண்டிதர்

பிரம்மஸ்ரீ சுப்பிரமணிய சாஸ்திரிகளவர்களால்

பார்வையிடப்பட்டு

தஞ்சை

ஸ்ரீ சங்கரவிலாச சாரதாமந்திர பிரஸில்,

பதிப்பிக்கப்பட்டது.

All Rights Reserved.

விலை] 1927. [அணா 2.

## விற்பனைக்கு தயாராயுள்ள புத்தகங்கள்.

| | | |
|---|---|---|
| 1. | ஸ்ரீ பஞ்சதசி வாலியும் 1 & 2 ... | 9—0—0 |
| 2. | ,, விருத்திப்பிரபாகரம் ... | 5—0—0 |
| 3. | ,, விசாரசாகரம் ... | 3—4—0 |
| 4. | ,, விசாரசந்திரோதயம் 4-ம் பதிப்பு | 1—8—0 |
| 5. | ,, பாலபோதம் ... ... ... | 1—8—0 |
| 6. | ,, விருத்திரத்நாவலி ... ... | 0-12—0 |
| 7. | நாநாஜீவவாதகட்டளை குறிப்புரை... | 0—4—0 |
| 8. | ஷை ... (செய்யுள்)... | 0—3—0 |
| 9. | விவேகசிந்தாமணி ... | 0—6—0 |
| 10. | சங்கரநீலகண்டாசார்ய சம்வாதம் ... | 0—6—0 |
| 11. | ஹடயோகபிரதீபிகை ... ... | 2—0—0 |
| 12. | சிவயோகப்பிரதீபிகை ... ... | 0-10—0 |
| 13. | அபரோக்ஷானுபூதி-ச-கி 1-ம் புத்தகம் | 0—8—0 |
| 14. | ஆத்மபோதம் தத்துவபோதம் ... | 0—8—0 |
| 15. | பஞ்சீகரணமுதலியன 27 புத்தகங்கள் | 1—0—0 |
| 16. | குருபுஜங்கஸ்தோத்திரம் ... ... | 0—4—0 |
| 17. | பிரச்நோத்திர ரத்நமாலை ... ... | 0—2—0 |
| 18. | தருக்ககௌமுதி ... ... ... | 0-10—0 |
| 19. | சிவஞானபோதம் (உரையுடன்) ... | 1—8—0 |
| 20. | ஞானவாசிட்டம் வசனம் ... .. | 1—4—0 |
| 21. | கைவல்யோபநிடதம், அமிர்தபிந்தூப நிடதம், சுகரகசியோபநிடதம், ஸ்கந்தோபநிடதம் (செய்யுள்) ... | 0—5—0 |
| 22. | தத்துவமஸிமகாவாக்கியவுபதேசம். | 0—3—0 |
| 23. | சுருதிஷட்லிங்கசங்கிரகம் ... ... | 0—8—0 |
| 24 | ஸ்ரீ நந்திகேசுவரகாசிகை ... ... | 0—4—0 |
| 25. | உத்திரகீதை கீ. கொ. (1-ம் புத்தகம். | 0—6—0 |
| 26. | ஸ்ரீ ராமகீதை ஷை (2-ம் புத்தகம். | 0—6—0 |
| 27. | குருகீதை ஷை (3-ம் புத்தகம்). கலிகா. | 1—4—0 |
| | ஷை ஷை ராப்பர். | 1—0—0 |

28. தேவீகீதை கி. கொ (4-ம் புத்தகம். 0-12—0
29. பகவத்கீதை, கர்மகீதை, சப்தசுலோக
கீதை ... ... 1—4—0
30. கீதாசாரதாலாட்டு கி.கொ 5ம் புத்தகம் 0—6—0
31. சிவபஞ்சாக்ஷரவிளக்கம், ஸ்ரீராமமந்திரார்த்தம்
ஸ்ரீகணேசஷோடச நாமஸ்தவம் ... 0—4—0
32. வைஷ்ணவ அஷ்டாக்ஷரமந்திரார்த்த
சங்கிரகம் ... ... 0—2—0
33. ஸ்ரீஜகத்குரு ஆதிசங்கராசாரியர்
சரித்திரம் (செய்யுள்) ... ... 0—3—0
34. ஷை ஷை வசனம் ... 0—2—0
35. தஞ்சை ஸ்ரீ பிரம்மாநந்தஸ்வாமிகள்
திவ்ய சரித்திரம் நான்மணிமாலை ... 0—8—0
36 பிரஹ்மவிதாசீர்வாத பத்ததி ... 0—2—0
37 பிரம்மநாமாவலி (செய்யுள்) ... 0—2—0
38. ஷை நாகரம் கார்டு ... 0—0—6
39. சங்கர வித்யாரண்யாஷ்டோத்திர
சதநாமம், நா கி தமிழ் தனித்தனி. 0—2—0
40 குர்வஷ்டோத்திரசதநாமாவலி,
நா. கி. தமிழ் தனித்தனி ... 0—3—0
41. நாராயணஸ்தோத்திரம் நா. கார்டு ... 0—0—6
42 நாமராமாயணமும், நாராயணஸ்தோத்
திரமும் தமிழ் ... .. ... 0—1—0
43 காயத்ரீராமாயணம்-நாகரி .. 0—1—0
44 ராமாயணசூர்ணிகை, நா. த தனித்தனி 0—1—0
45. ஜகத்குரு சங்கராசாரியர்படம் பெரிது 0—2—0
46. பிரம்மாநந்தசுவாமிகள் படம் பெரிது 0—2—0
47. சீதாதேவிக்கு ஹநுமார் கணையாழி
கொடுத்தபடம் ... ... ... 0—1—0

மானேஜர், ஸ்ரீ சங்கரவிலாச சாரதாமந்திரம்,
வடக்குருஜவீதி தஞ்சாவூர்.

உ

॥ ॐ तत्सद्ब्रह्मणे नमः ॥

ஓம் தத்ஸத்பிரஹ்மணே நம:

# ॥ प्रश्नोत्तररत्नमालिका ॥

# பிரசிநேத்தர ரத்நமாலிகா.

## மங்கலமும் பிரதிஞ்ஞையும்.

प्रणिपत्य महादेवं प्रश्नोत्तररत्नपद्धतिं वक्ष्ये ।
नागनरामरवन्द्यं सर्वज्ञं मोक्षदं शान्तम् ॥ १ ॥

* நாகர், நரர், † அமரர் என்னும் இவர்களால் வணங்கப்படுபவரும், முற்றறிவுடையவரும், சாந்தமுள்ளவருமான மகாதேவரை நமஸ்கரித்துப் ‡ பிரசிநேத்தாரத்நமாலிகை யென்னும் இந்நூலினைச் சொல்லுகின்றேன். (க)

* நாகலோகவாசிகள். † தேவர். ‡ வினவிடைகளாகிய இரத்தினங்களின் கோவை.

(அ-கை) அங்கு முதலில் அதிகாரியினது பிரவிருத்தியின்பொருட்டு விஷயம் பிரயோஜனம் முதலியவற்றைக் காட்டிக் கூறுகின்றார் :—

**कः खलु नालंक्रियते दृष्टादृष्टार्थसाधनपटीयान् ।**
**अनया कण्ठस्थितया प्रश्नोत्तररत्नमालिकया ॥ २ ॥**

(இ-ள்) *திருஷ்டாதிருஷ்டார்த்தங்களைச்சாதித்தலில் மிக்கசாமர்த்தியமுடையவனாகியஎப்புருஷன் கண்டத்தின்கண்ணுள்ள (செவ்வையாய் அப்பியசிக்கப்பட்ட) தான † இந்தப் பிரசிேனாத்தர ரத்நமாலிகையினால் நிச்சயமாக அலங்கரிக்கப்படான்? (எ-று)

திருஷ்டாதிருஷ்டார்த்தங்களைச் சாதித்தலில் மிக்க சாமர்த்தியமுடையவன் என்பதனால் இந்நூலின் அதிகாரி சூசிப்பிக்கப்பட்டனன்.

---

* திருஷ்டார்த்தம் = இம்மைப்பயன். அதிருஷ்டார்த்தம் = மறுமைப்பயன். ஸித்தாஸித்தார்த்த. என்பது பாடமாயின் ஸித்தம் = அடையப்பட்டது. அஸித்தம் = அடையப்படாததாம். அவை புருஷர்களால் விரும்பப்படும் தர்மார்த்தகாமமோக்ஷங்களாம். அடையப்பட்டவைகளை இரக்ஷித்தற்கும், அடையப்படாதவற்றை பெறுதற்பொருட்டும் உபாயந்தேடுதல் அவற்றைச் சாதித்தலாம் † இந்த என்னும் சுட்டு புத்தியிலிருத்தற்றன்மையால் பிரத்தியக்ஷமாயிருத்தலின்.

பிரசினங்கட்கு உத்தரங்களை விளக்குந்தன்மை யிருத்தலாலும், உத்தரங்கட்குத் தம்மாற் சொல்லப் படுபவைகளை விளக்குந்தன்மையிருத்தலாலும் சொல் லுவோனுக்குச் சோபையைத்தருந் தன்மையிருத்த லாலும் (அவற்றிற்கு) இரத்தினத்தன்மை பொருந்து கின்றது.

எவனால் இது அப்பியசிக்கப்பட்டு சமயத்தில் உபயோகிக்கப்படுகின்றதோ அவன் முழுவதும் அலங்கரிக்கவே படுவான் என்பது பொருள். இத ஞல் அலங்கரிக்கப்படுதல் மாத்திரமன்று; புரு ஷார்த்த சித்தியினால் கிருதார்த்தத் தன்மையினையும் பெறவேசெய்கின்றான்.

இந்நூலில் உத்தரங்கள் விஷயங்கள். அவற் றைக் கொள்ளுதலாம் புருஷார்த்தசித்தி பிரயோ ஜனம். அதனை விரும்புபவன் அதிகாரி. விஷயத்திற் கும் நூலிற்குமுள்ள பிரதிபாத்தியபிரதிபாதகபாவம் சம்பந்தம்.

கண்டத்திருப்பதாவது சமயத்தில் உபயோகப் படுத்தப்படுவதாதல். (௨)

(அ-கை) இவ்வாறு விஷயப்பிரயோஜன முத லியவற்றைக் காட்டிச் சொல்லக்கருதியதனைக் கூறு கின்றார்:—

भगवन् किमुपादेयं गुरुवचनं हेयमपि च किमकार्यम्
को गुरुरधिगततत्त्वः शिष्यहितायोद्यतः सततम् ॥ ३ ॥

சிஷ்யன் குருவைக் கேட்கின்ருன் :—

பிரசினம் :—* பகவானே ! கொள்ளத்தக்கது யாது?

குரு உத்தரஞ் சொல்லுகின்ருர் :—

உத்தரம் :—† குரவன் வாக்கியம்.

பிர :—தள்ளத்தக்கது யாது ?

உத் :—‡ அகாரியம் அதாவது செய்யத்தகாதது.

பிர :—குரவன் யார் ?

உத் :—எப்போதும் § சிஷ்யனது நன்மையின்பொருட்டு முயன்றுள்ள (தயை சாந்தியாதி

---

*பகம் = ஞானமுதலிய சர்வஐசுவரியம் ; அதனையுடையவர் **பகவான்.**

† இதத்தையுபதேசிப்பவர்.

‡ சுருதி சாஸ்திரங்களில் விலக்கப்பட்டுள்ளது அகாரியம்.

§ சிக்ஷி (உபதேசி) த்தற்கு உரியவன் **சிஷ்யன்.**

குணமுடைய) தத்துவஞானி. (தத்துவ ஞானி யென்றமையால் சகல சாஸ்திரார்த்த தாற்பரியமு முணர்ந்த ஞான (பரோக்ஷம்) விஞ்ஞான (அபரோக்ஷம்) சம்பன்னரே குரு என்று அறிவிக்கப்பட்டது.) (ங)

किं पथ्यतरं धर्मः कः शुचिरिह यस्य मानसं शुद्धम् ।
कः पण्डितो विवेकी किं त्रिषमवधीरणा गुरुषु ॥ ४ ॥

பிர :—* பத்தியதரம் (மிகப்பத்தியமானது) யாது?

உத் :—† தர்மம்.

பிர :—‡ இங்கு (தர்மவிஷயத்தில்) சுசி யாவன்?

---

* பதிக்கு = நல்வழிக்கு அதாவது உத்தமகதியை யடைதற்கு மிகவும் இத(அநுகூல)மாயிருப்பது எதுவோ அது பத்தியதரமெனப்படும்.

† வர்ணாசிரமத்தின்படி வேதாதி சற்சாஸ்திரங்களிற் சொல்லப்பட்ட அக்கினிஹோத்திராதி நித்தியநைமித்திக பிராயச்சித்தாதி சற்கருமத்தொகுதி தர்மம்.

‡ தர்மஞ்செய்பவன் எப்படிப்பட்ட சுத்தியைச் சம்பாதிக்க வேண்டுமென்பது பிரசினதாற்பரியம்.

உத் :—§ எவன் மனது சுத்தமாயிருக்கிறதோ அவன்.

பிர :—|| பண்டிதன் யாவன்?

உத் :—¶ விவேகி.

பிர :—$ விஷம் யாது?

உத் ;—ψ குரவரிடத்து (செய்யும்) அவமானம் (௪)

---

§ ஸ்நானமுதலியவற்ருல் சுத்தி சம்பாதிக்கினும் சகல அழுக்கிற்குங்காரண வடிவமான காமக்குரோத முதலிய வற்றை விடுதலால் சத்துவம் மிகவிருத்தியாவதனுல் எவனுடைய மனது சுத்த(நிச்சல)மாயிருக்கிறதோ அவன் சுசி என்பது பொருள். மனது சுத்தமாயிருந்தால் ஆசரிக்கப்பட்ட தர்மமாகிய ஸ்நானசந்தியாதிகள் அங்கத்தோடுகூடியனவாகி புண்ணிய வாயிலாகச் சொல்லப்பட்ட பயனைத் தருவனவா மென்பது தாற்பரியம்.

|| சாஸ்திர ஞானமுடைய புத்தி பண்டா வெனப்படும். அதனையுடையவன் பண்டிதன். சாராசார விசாரமுடையவன் பண்டிதனென்பது பொருள்.

¶ விவேகமே சுகத்திற்குக் காரணமாதலால் அதனையுடைமையினுலேயே பாண்டித்திய சித்தியென்பது கருத்து. இதனுற்ருன் விவேகமுள்ளபோது சுகம் அஃதில்லாதபோது துக்கமென்று பலநூல்கள் கூறுகின்றன.

$ விஷத்தைப்போல அபகாரஞ்செய்வது யாது என்பது பொருள்.

ψ தாய் தந்தை முதலிய பூஜிக்கத்தக்கவர் குரவரெனப்படும்.

त्वरितं किं कर्तव्यं विदुषा संसारसंततिच्छेदः ।
किं मोक्षतरोर्बीजं सम्यग्ज्ञानं क्रियासहितम् ॥ ५ ॥

பிர:—அறிஞனால்(வேதசாஸ்திரமோதியுணர்ந்தபுருஷனால்) * விரைவிற் செய்யத்தக்கது யாது?

உத்:—† சம்ஸார சந்ததியின் சேதம்.

---

* இவ்விரைவிலென்னும் சொல், "கௌமாரத்தில் பிராஞ்ஞன் இங்கு பகவானை அடைதற்குரிய தர்மங்களை ஆசரிக்கவேண்டியது." என்பதனைச் சூசிப்பிக்கின்றது. இதனாற்றான் பர்த்திருஹரியானவர், "எதுவரையில் இச்சரீரம் ரோகமின்றியதாயிருக்கின்றதோ, எது வரையில் ஜரை (மூப்பு) தூரமாயிருக்கின்றதோ, எதுவரையில் இந்திரிய சக்தி கெடாதிருக்கின்றதோ, எதுவரையில் ஆயுசு க்ஷயமாகவில்லையோ, அவ்வளவிற்றானே ஆத்மசிரேயசில் அறிஞனால் பெருமுயற்சி செய்யத்தக்கதாம். ஏனெனின், வீடு பற்றுங்கால் கிணறு வெட்டுதலாகிய பெருமுயற்சி எத்தன்மைத்தாம்?' என்றும் "ஜரை புலிபோல் நிற்கின்றது; பயமுறுத்துகின்றது. ரோகங்கள் சத்ருக்களைப் போல தேகத்தை வருத்துகின்றன. ஆயுளானது ஓட்டைக்குடத்து ஜலம்போல ஒழுகிப்போகின்றது. அவ்வாறிருக்கினும் உலகம் அஹிதத்தை (அநுகூலமில்லாததை) ஆசரிக்கிறது. இது ஆச்சரியம்!" என்று கூறியிருக்கின்றார்.

† ஸம்சாரசாந்தியாவது ஜன்ம மரண முதலிய துக்கப்பிரவாகம், அதின் சேதமாவது அதனை மூல(அஞ்ஞான)த்தோடு கெடுத்தல்.

பிர :—‡ மோக்ஷவிருக்ஷத்திற்கு வித்து யாது ?
உத் :—§ கிரியையோடுகூடிய நல்ல ஞானம்.

**किं संसारे सारं बहुशोऽपि विचिन्त्यमानमिदमेव ।**
**मनुजेषु दृष्टतत्त्वः कः परहित उद्यतः सततम् ॥ ६ ॥**

பிர :—சம்ஸாரத்தில் சாரம் யாது ?
உத் :—|| வெகுவிதமாயும் மிகச்சிந்தித்துக் கொண்டிருக்கும் இதுவே.

---

‡ மோக்ஷமாவது "எதனையடைந்து திரும்புகிறதில்லையோ, அஃது எனது மேலான இடம்." என்றுபக வனாற் சொல்லப்பட்ட பரமபுருஷார்த்தம். அது நிரதிசாயநந்த பலமுடைமையால் விருக்ஷம்போலாம். அதனையடைதற்குரிய அசாதாரண காரணம் அதன் வித்து.

§ நித்தியநைமித்திகாதி நிஷ்காம கர்மயோகம் கிரியை. அதனோடுகூடிய தன்மையாவது அதனாலுண்டாகிய அந்தக்கரணசுத்தியினால் விரிந்ததன்மை. நல்ல ஞானமாவது விதிபூர்வகமாகக் குருவைச் சரணுகதியடைதலாற் பெறப்பட்ட சிரவணமனனாதிகளாலாகும் அசம்பாவனாதி தோஷமின்றியதும், மகாவாக்கியத்தினாற்பிறந்ததும், நித்திய சுத்த புத்த முக்த சச்சிதாநந்த சொரூபாத்துவிதீயாத்ம வடிவின்துமான சித்தவிருத்தி. அது மோக்ஷத்திற்கு வித்து என்பது பொருள். ஞானத்தினாலேயே மோக்ஷமென்பது வேதாகமபுராணேதிகாச முதலியவற்றில் பிரசித்தம்.

|| துக்கத்தைத்தவிர வேறு சாரமில்லையென்றபடி.

பிர :—மனிதர்களில் தத்துவமுணர்ந்தவன் யாவன்?

உத் :—எப்போதும் ¶ பிறர் நன்மையில் தற்பரனாயிருப்பவன். (கூ)

मदिरेव मोहजनकः कः स्नेहः के च दस्यवो विषयाः ।
का भववल्ली तृष्णा को वैरी यस्त्वनुद्योगः ॥ ७ ॥

பிர :—கள்ளைப்போல * மோகத்தை யுண்டுபண்ணுவது யாது?

உத் :—† சிநேகமாம்.

பிர :—‡ கள்வர் யாவர்?

உத் :—§ விஷயங்கள்.

---

¶ "பாரகாரியமானாலும் பலர்க்குபகாரமாக
நேரதாய்ச்செய்வர்தீர்ந்த நிலைவிடார்சீவன்முத்தர்."—
கைவல்யம்.

* மோகமாவது அறிவிழப்பு.

† தாரபுத்திராதிகளில் எனதென்னுந்தன்மையாலுண்டாம் பிரியம். அது பிரதிகூலத்திலும் அநுகூல புத்தியினாலுண்டாகின்றது.

‡ சொத்துக்களை யபகரிப்பவர்.

§ சப்தாதிகள் அல்லது புத்திரகளத்திராதிகள்.

பிர :—‖ பிறவிக்கொடி யாது ?

உத் :—¶ திருஷ்ணை (அவா).

பிர :—$ வைரி (பகை) யாது ?

உத் :—ψ முயற்சி யின்மை. (எ)

कस्माद्भयमिह मरणादन्धादपि को विशिष्यते रागी ।
कः शूरो यो ललनालोचनबाणैर्न हि व्यथितः ॥ ८ ॥

பிர :—இங்கு எதனின்றும் பயமுண்டாம் ?

உத் :—* மாணத்தினின்றும்.

---

‖ மாணுதிதுக்க வடிவ பலத்தைத் தருதலால் கொடி யெனப்பட்டது.

¶ அடைந்தபொருள் விருத்தியாக வேண்டுமென்றும் இச்சை எதுவோ அது திருஷ்ணை.

$ அபகாரஞ்செய்வது.

ψ தனது நலத்திற்கேதுவான பிரயத்தினத்தைவிட்டு, சோம்பல் முதலியவற்ருல் சும்மாவிருத்தல்.

* பிராணன் உடலைவிட்டுப் பிரிதல், எதனது பரிகாரத்தின்பொருட்டு சகலப் பிரவிருத்திநிவிருத்தி வடிவ சாஸ்திரப்பிரவிருத்தியோ, அந்த மிருத்தியுவினைவிட அதிகமான பயத்தைத்தாத்தக்கது வேறில்லை யென்பது தாற்பரியம்.

பிர :—குருடனைவிட விசேஷப்படுபவன் யாவன் ?

உத் :—† இராகமுடையவன்.

பிர :—சூரன் யாவன் ?

உத் :—‡ மாதர்விழியம்புகளால்வேதிக்கப்படாதவன்.

पातुं कर्णाञ्जलिभिः किममृतमिव युज्यते सदुपदेशः ।
किं गुरुताया मूलं यदेतदप्रार्थनं नाम ॥ ९ ॥

பிர :—* கர்ணாஞ்சலிகளால் பருகுவதற்கு அமிருதத்
தினைப்போற் பொருந்துவது யாது ?

உத் :—† நல்லுபதேசம்.

---

† அத்தியந்த விஷயப்பற்றுடையவன், எதனால் அநுராகத்தினால் விவேகம் கெடுகின்றதோ, பிரசித்தமான குருடனுக்கோ பிரஞ்ஞையாகிய நேத்திரமிருத்தலால் விவேகமின்றிய தன்மையில்லை. ஆதலால் இராகமுடையவன் அவனைவிட அதிகக் குருடன் என்பது பொருள்.

‡ அழகிய பெண்களது விழிப்பார்வைகளால் கலக்கப்படாதவன் எவனோ அவனே சூரன் என்பதுபொருள்.

* காதுகளை க்கைகளாக்கிக் குடித்தற்கு.

† நல்லோராகிய தாய் தந்தை ஆசிரியர் முதலியோரது இதமானவார்த்தை. "மூத்தோர் சொல் வார்த்தையமிர்தம்" என்பதனால் காண்க. அமுதத்தை யுவமித்தது ஒருவாறேயல்லது உண்மையில் நீக்கற்கரிய பவரோகத்தை நீக்குதலால் அமுதத்தைவிட் அதற்குமேலான தன்மையுண்டு.

பிர :—பெருமைக்குக் காரணம் யாது?
உத் :—‡ இரவாமை. (௯)

किं गहनं स्त्रीचरितं कश्चतुरो यो न खण्डितस्तेन ।
किं दारिद्र्यमतोषः किं लाघवमधम इह याञ्चा ॥ १० ॥

பிர :—* ஆழமுடையது யாது?
உத் :—† ஸ்திரீகளின் நடை.
பிர :—சதுரன் (சாமர்த்தியசாலி) யாவன்?
உத் :—அதனால் (ஸ்திரீயின் நடையினால்) கண்டி (வஞ்சி)க்கப்படாதவன்.
பிர :—வறுமை யாது?

---

‡ இரவாமை பொருமைக்குக் காரணமென்றமையால் இரத்தல் சிறுமைக்குக்காரணமாமென்பது பெறப்பட்டது. இதனையே "ஏற்பதிகழ்ச்சி" யென்று ஔவையாரும்,
"கரவா துவந்தீயுங் கண்ணன்னார் கண்ணு
மிரவாமை கோடி யுறும்"—திருவள்ளுவநாயனார்.

* அறிதற்கரியது.

† "ஸ்திரீகளின் நடையையும் புருஷனது பாக்கியத்தினையும் தேவனறியானெனின் மனிதன் எவ்வாறறிவன்?" என்பது முதியோர்மொழி.

உத் :—‡ சந்தோஷ மின்மை.

பிர :—கீழ்மை யாது?

உத் :—இங்கு § அதமர்களிடத்து யாசித்தல். (கo)

किं जीवितमनवद्यं किं जाड्यं पाठनेऽप्यनभ्यासः ।

को जागर्ति विवेकी का निद्रा मूढता जन्तोः ॥ ११ ॥

பிர :—வாழ்க்கை யாது?

உத் :—* குற்றமின்றியதாம்.

பிர :—† ஜாட்டியம் யாது?

---

‡ கிடைத்ததிற், போதுமென்று அமைதிபெருமை யாகிய லோபம் என்பது பொருள்.

§ துர்ஜனரிடத்து எவ்விதத்தாலும் யாசிக்கலாகாது. அந்த யாசிப்பு ஸபலமாயினும் கீழ்மையே. சற்ஜனரிடத்து யாசித்தலோ அவ்வாறு கீழ்மையைத்தருவதாகா தென்பது கருத்து.

* பரோபகார முதலிய நற்கருமங்களாற் சம்பாதிக் கப்பட்ட கீர்த்திப்பிரகாசமுடையவாழ்க்கையே வாழ்க்கை. மற்றையது வீணனதென்பது பொருள்.

† ஓதுவித்தலும், உம்மையால் ஓதலுமாம். இரண் டிடத்து பழகுதலில்லாமை அப்பியாசமின்மையாம். அப்பி யாசமாவது மருபடியும் மறுபடியும் இரண்டனையும் சம்பா தித்தலாம். அதன் இன்மை ஜாட்டிய (அறிவின்மை) மெனப்படும்.

உத் :—‡ ஓதுவித்தலினும் அப்பியாசமின்மை.

பிர :—§ விழித்திருப்பவன் யாவன் ?

உத் :—|| விவேகி.

பிர :—ஜந்துக்களுக்கு நித்திரையாது ?

உத் :—¶ மூடத்தன்மையாம். (கக)

नलिनीदलगतजललवतरलं किं यौवनं धनं चायुः ।

के शशधरकरनिकरानुकारिणः सज्जना एव ॥ १२ ॥

பிர :—தாமரையிலுள்ள நீர்த்துளியினைப்போல நிலையில்லாதது யாது ?

---

‡ விழிப்பு = யதார்த்தஞானம்; அதனையுடையவன்.

§ சாராசாரவிசாரம் விவேகம்; அதனையுடையவனுக்கு யதார்த்த ஞான முதிக்கும். அதனால் அவனே விழித்திருப்பவனாவன், அவ்வாறின்றி ஸ்தூல விஷயாநுபவவடிவ விழிப்பு நித்திரையேயா மென்பது கருத்து. இதனை பகவத்கீதை 2-வது அத்தியாயம் சுகூ-வது சுலோகத்திற்காண்க.

|| அஞ்ஞானமுடைமை. நித்திரைக்கும் மூடத்தன்மைக்கும் வஸ்து ஞானமின்மையாகிய சமானவடிவமிருத்தலின் மூடத்தன்மையை நித்திரை யென்றார். அஃது எங்கு இருக்கின்றதோ, அவன் மனிதனையினும் கிருமிகீடகங்களுக்குச் சாமான மென்பது ஜந்துவென்பதனால் வெளிப்படுகின்றது.

உத் :—* யௌவனம், தனம், ஆயுள்.

பிர :— சந்திர கிரணத்தினைப்போல பிறர்க்கிதஞ் செய்பவர் யாவர்.

உத் :—† நல்லோரே. (கஉ)

को नरकः परवशता किं सौख्यं सर्वसङ्गविरतिर्या ।
किं साध्यं भूतहितं प्रियमपि किं प्राणिनामसवः ॥ १३ ॥

பிர :—* நரகம் யாது?

உத் :—† பரவசத்தன்மை.

பிர :—சௌக்கியம் யாது?

---

* இவை புருஷார்த்தத்திற்கு அநுகூலமானவை யாகலின் இவற்றின் நிலையாமை யறிந்து இவையுள்ள போதே விரைவில் புருஷார்த்த சித்தியைச் செய்துகொள் ளவேண்டுமென்பது கருத்து.

† சந்திரகிரணம் சுகத்திற்கு ஏதுவாதல் போல நல் லோரும் சுகத்திற்கேதுவாதல் பிரசித்தம்.

* கும்பிபாகாதி நரகங்களைப்போல துக்கத்தைத்தரு வது.

† பராதீனத்தன்மை (பிறர்வசத்தனாதல்) நரகத்தினைப் போலப்பற்பலக்லேசங்களைத்தருவதாமென்பது பொருள்.

உத் :—‡ சர்வசங்கவிரதி.

பிர :—சாதிக்கத்தக்கது யாது?

உத் :—§ உயிர்களுக்கு இதம்.

பிர :—பிராணிகளுக்குப் பிரியமானது யாது?

உத் :—|| பிராணன். (கரு)

किं दानमनाकाङ्क्षं किं मित्रं यन्निवर्तयति पापात् ।
कोऽलंकारः शीलं किं वाचां मण्डनं सत्यम् ॥ १४ ॥

பிர :—கொடை யாது?

---

‡ விஷயங்களெல்லாவற்றின் சங்கம் (ஆசை) ஒழிதல். இதனால் விஷயாநுசந்தானத்தினைவிட்டுச் சித்தம் சுகரூபமான ஆத்மாகாரமடைதலால் சுகசாதனமாயிருக்கின்றது. அது பற்றிச்சுகமென்றூர்.

§ உயிர்களுக்கு இதஞ்செய்தலும் அவற்றின்கண் வைக்கும் தயையினாலுண்டாகின்றது. அத்தயையும் ஞானசாதனமாகக் கீதையின் கஉ-வது அத்தியாயம் உ-வது சுலோகத்திற் கூறப்பட்டிருக்கின்றது. இதனால் சாதிக்கத்தக்கது மேலான சிரேயஸைத்தரத்தக்கதான உயிர்களுக்கிதஞ்செயதலே யென்பது பெறப்பட்டது.

|| பிராணன் பிராணிகளுக்கு உபகாரகமாம்; ஆதலால் பிராணிகளுக்கு இதமானது சாதிக்கத்தக்கதென்பது கருத்து.

உத் :—* இச்சையின்றியது.

பிர :—மித்திரன் யாவன்?

உத் :—† பாபத்தினின்றும் எவன் விலக்குகின்றானோ அவன்.

பிர :—அலங்காரம் யாது?

உத் :—‡ சீலம்.

---

* எவனுக்குக் கொடுத்தானோ அவனிடத்தினின்று கொடுக்கப்பட்டதையாவது மற்றொன்றனையாவது வாங்கும் விருப்பம் எதிலில்லையோ, அது கொடை யென்பது பொருள். இது முக்கியமான சாத்துவிக தானம். அது பகவனால் "கொடுக்கவேண்டுமென்று எந்தத்தானம் உபகாரஞ்செய்யாதவனுக்கு நல்ல தேசத்திலும் காலத்திலும் பாத்திரத்திலும் கொடுக்கப் படுகின்றதோ அத்தானம் சாத்துவிக மென்று கருதப்படுகின்றது." என்று கீதையின் கஎ-வது அத்தியாயம் உ०-வது சுலோகத்திற் சொல்லப் பட்டுளது.

† துக்ககாரணத்தினின்றும்.

‡ சீலமென்பது ஸ்வபாவத்திற்கும் நன்னடைக்குமாம், தயை, அன்பு இன்சொல், உதாரத்தன்மை தைரிய முதலியவற்றினை நிறுத்துவதான ஓர் சம்ஸ்காரவிசேஷமாகிய நற்கருமத்தினாலா முத்தமஸ்வபாவமும், காலத்திற்கேற்றதும் தேசத்திற் கேற்றதும் சக்திக் கேற்றதுமான ஸ்நானம் சந்தி ஜபம் பூஜை ஹோமம் தான முதலிய சதாசாரமும் சீலமாம். அதுவே பூஷண மென்பது பொருள்.

பிர :—வாக்கிற்கு அணி யாது?

உத் :—§ சத்தியம் (உண்மை). (கச)

किमनर्थफलं मानः सुसङ्गतिः का च सुखसहा मैत्री ।
सर्वव्यसनविनाशे को दक्षः सर्वथा त्यागी ॥ १५ ॥

பிர :—அநர்த்த (துக்க) பலமுடையது யாது?

உத் :—* மானம்.

பிர :—அழகிய சம்பந்தமுடையது யாது?

உத் :—† சுகத்தைச் சகிக்கு மித்திரத் தன்மை.

பிர :—சர்வவியஸனத்தையும் கெடுத்தலிற் சமர்த்தன் யாவன்?

---

§ சத்தியம் பேசுவதனுல் இம்மையிலும் மறுமையிலும் சோபிக்கின்றது. ஆதலால் அது பூஷணமாதல் பொருத்தமுடையதாம்.

*தேகாதிகளிலுண்டாம் அபிமானம் சர்வாநர்த்தகாரணமா மென்பது பொருள்.

†பிறருக்குண்டாம் சுகத்தைக் கண்டு சகித்தல் அதாவது பிறர் சுகத்தை விரும்புதல். எல்லோரிடத்தும் வைக்கும் மித்திரத்தன்மை எதுவோ, அது உத்தம சம்பந்தமான மித்திரத்தன்மையாம்; பெரும்பயனைத் தருவதாயிருத்தலின்.

உத் :—‡ எல்லாவிதத்தாலும் துறந்தவன். (கரு)

कोऽन्धो योऽकार्यरतः को बधिरो यः शृणोति न हितानि ।
को मूको यः काले प्रियाणि वक्तुं न जानाति ॥ १६ ॥

பிர :—குருடன் யாவன் ?

உத் :—* அகாரியரதன்.

பிர :—செவிடன் யாவன் ?

உத் :—இதமானவற்றைக் கேளாதவன்.

பிர :—ஊமை யாவன் ?

உத் :—எவன் காலத்திற் பிரியமானவற்றைப் பேசத் தெரியாதோ அவன். (கசு)

किं मरणं मूर्खत्वं किं चानर्घं यदवसरे दत्तम् ।
आ मरणात् किं शल्यं प्रच्छन्नं यत्कृतं पापम् ॥ १७ ॥

பிர :—மரணம் யாது ?

---

‡எல்லாவிதத்தாலும் பற்றைவிட்டவனுக்கு எச்சங்கடமுமில்லையென்பது பொருள். அதனை "யாதெனின் யாதெனினீங்கியா, னோதலதனினதனினிலன்." என்னும் திருவாக்கானுணர்க.

*செய்யத்தகாதவற்றில் அழுந்தியவன் குருடனுக்குச் சமமாவனென்பது பொருள்.

உத் :—* மூர்க்கத்தன்மை.

பிர :—விலமதிக்கத்தகாதது யாது?

உத் :—† சமயத்தில் கொடுக்கப்பட்டது.

பிர :—மரணபரியந்தம் ‡ சல்லியம் யாது?

உத் :—§ மறைத்து வைக்கப்பட்டதாய்ச் செய்யப்பட்டுள்ள பாபம் எதுவோ அது. (௧௭)

कुत्र विधेयो यत्नो विद्याभ्यासे सदौषधे दाने ।
अवधीरणा क्व कार्या खलपरयोषित्परधनेषु ॥ १८ ॥

பிர :—எத்தனம் செய்யத்தக்கதெங்கே?

---

*சாஸ்திரம் வியவகாரமிரண்டுந் தெரியாத்தன்மை. மூர்க்கன் தனக்கும் பிறர்க்கும் உபயோகமின்மையால் உண்மையில் இறப்பொக்கு மென்பது பொருள்.

†அவ்வச்சமயங்களில் கொடுக்கப்பட்ட அந்நபானாதி எதுவோ, அது விலமதிக்கப்படாததா மென்பதுபொருள். இதனையே திருவள்ளுவ நாயனர், "காலத்தினாற் செய்த நன்றி சிறிதெனினு ஞாலத்தின் மாணப் பெரிது." என்று கூறினார்.

‡அம்பின் நுனிபோல் துக்கத்தைத் தருவது.

§பிராயச்சித்தம் செய்யாது மறைத்து வைக்கப்பட்ட பாபம் பிடுங்கப்படாத அம்பின் நுனிபோல் மறுபிறப்புக்களிலும் துன்பத்தைத் தருவதா மென்பது பொருள்.

உத:—* வித்தியாப்பியாசத்திலும், நன்மருந்திலும், தானத்திலும்.

பிர:—அநாதரஞ் செய்யவேண்டிய தெங்கே?

உத்:— துர்ஜனரிடத்தும், பரஸ்திரீயினிடத்தும், பிறர்பொருளினும். (கஅ)

काहर्निशमनुचिन्त्या संसारासारता न तु प्रमदा ।
का प्रेयसीव करुणा किं दाक्षिण्यं महन्मैत्री ॥ १९ ॥

பிர:—பகலுமிரவுஞ் சிந்திக்கத் தக்கது யாது?

உத்:—*சம்சாரத்தின் அசாரத்தன்மை; பிரமதை (ஸ்திரீ) யன்று.

---

*வேதமுதலிய பதினான்கு வித்தைகளையும் கற்பதில்.

*சம்சாரத்தின் நிலையாமையாகிய அசாரத்தன்மையை விசாரித்தலால் ஸ்திரீபுத்ராதிப் பிரபஞ்ச விரக்தியுண்டாகின்றது. அதனால் தனது நலத்திற் கேதுவான சாதனத்திற் பிரவிருத்தியுண்டாகின்றது என்பது கருத்து. இது ஞான சாதனமென்பது "ஜன்மம் மரணம் மூப்பு வியாதிகளில் துக்கத்தினையும் தோஷத்தினையும் தொடர்ந்து பார்த்தல்" என்று கீதையின் கங-வது அத்தியாயம் அ-வது சுலோகத்திற் கூறப்பட்டிருக்கின்றது. எவளை நினைத்தலால் தனது நலத்தில் பிரமாதம் (சோர்வு) உண்டாகின்றதோ, அதனால் அவளை நினைக்கலாகாதென்னும் அபிப்பிராயத்தால் பிரமதை யென்னும் சொல் பிரயோகிக்கப்பட்டுளது.

பிர :—†மிகப்பிரியமானது யாது?

உத் :—‡கருணை.

பிர :—சாமர்த்தியம் யாது?

உத் :—§பெரியோர் நட்பு. (கக)

कण्ठगतैरप्यसुभिः कस्यात्मा नार्च्यते जातु ।
मूर्खस्याशङ्कस्याविशदस्य तथा कृतघ्नस्य ॥ २० ॥

பிர :—*தொண்டையிற் பிராணனுள்ளபோதும் எவனுடைய சித்தம் ஒருபோதும் இரங்காது?

உத் :—†மூர்க்கனுடையது, ‡சங்கையில்லாதவனது,

---

†அதிப்பிரீதிக்கு விஷயமாங் குணங்களை யுடைய பதிவிரதா ஸ்திரீயினைப் போல இதத்தைச் சம்பாதிப்பது யாதென்பது பிரசினத்தின் பொருள்.

‡பிராணிக ளெல்லோரிடத்தும் தயைவைத்தலால் எல்லாம் நட்பாய் இதத்தை விரும்புகின்றது. ஆதலால் அது அவசியம் சம்பாதிக்கத்தக்கதாம்.

§பெரியோர் சிநேகத்தைச் சம்பாதித்தலே சாமர்த்திய மென்பது பொருள்.

*பிராணசங்கடம் நேர்ந்த போதும்.

†விவேக மின்மையால்.

‡உலகநாண மின்மையால்.

§தெளிவின்றியவனது, ||அவ்வாறே செய்ந் நன்றி மறந்தவனது. (௨௦)

कः पूज्यः सद्वृत्तः कमधममाचक्षते चलितवृत्तम् ।
केन जितं जगदेतत्सत्यतितिक्षावता पुंसा ॥ २१ ॥

பிர :—*பூஜிக்கத்தக்கவன் யாவன்?
உத் :—†நல்லொழுக்க முடையவன்.
பிர :—எவனை ‡அதம னென்று சொல்லுகிறது?
உத் :—§நழுவிய நடை யுடையவன்.
பிர :—இவ்வுலகு எவனால் ||ஜயிக்கப்பட்டதாம்?

---

§சாமார்த்திய மின்மையால்.

||உலோபமுதலிய தோஷ முடைமையால், இந்நால்வருடைய மனதும் பிராணசங்கடத்தும் கலங்காது என்பது பொருள்.

*வெகுமானிக்கத்தக்கவன்.

†உத்தமமான அதாவது சிஷ்ட (பெரியோர்) சம்மதமான நடையினையுடையவன்.

‡பூஜிக்கத் தகாதவன்.

§ஒழுக்கத்தினை கைவிட்டவன்.

||வசப்படுத்தப் பட்டது.

¶உண்மை பேசுதல்.

உத்:—¶சத்தியமும் $ திதிக்ஷையு முடைய புருஷனால். (௨௧)

कस्मै नमः सुरैश्च क्रियते हि दयावतां प्रधानाय ।

कस्मादुद्विजितव्यं संसारारण्यतः सुधिया ॥ २२ ॥

பிர:—எவனுக்குத் தேவர்களாலும் நமஸ்காரஞ்செய்யப்படுகின்றது?

உத்:—*தயையுடையவர்களில் பிரதானமானவனுக்கு.

பிர:—எதினின்றும் புத்திமான் வெறுப்படைய வேண்டியது.

உத்:—†சம்சாராரணியத்தினின்றும். (௨௨)

---

$சுகதுக்கலாபநஷ்டாதிகளைச்சகித்தல்(பொறுமை).

*எந்தத்தயையினால் பிறர்துன்பத்தைக் கண்டு சித்தம் இளகுகின்றதோ, அப்படிப்பட்ட தயையோடுகூடியவனுக் கென்பது பொருள். இதனாற்றான் "நல்லோர் இதயத்தினை நவநீதம் (வெண்ணெய்) என்று கவிகள் சொல்லுவதெதுவோ அது பொய். (ஏனெனின்), நல்லோருளம் பிறருடலி லுண்டாந் தாபத்தினால் இளகுகின்றது. அவ்வாறு நவநீதம் இளகுவதில்லை." என்று முதியோர் கூறியிருக்கின்றனர்.

†சம்சாரம்(ஜனனமரணாதி) காட்டினைப் போல் கடத்தற் கரியதாயிருத்தலின்,சம்சாரம் துக்கரூபமாயிருப்பதை யுணர்ந்து முக்தியில் முயற்சிக்கவேண்டுமென்பதுகருத்து.

कस्य वशे प्राणिगणः सत्यप्रियभाषिणो विनीतस्य ।
क स्थातव्यं न्याय्ये दृष्टादृष्टार्थलाभाय ॥ २३ ॥

பிர :—பிராணிகணம் எவனுக்கு வசமாம்?

உத் :—உண்மையு மினிமையுமான வசனமுடைய விநயமுள்ளவனுக்கு.

பிர :—இகலோக பரலோகப் பொருள்களைப் பெறுதற் பொருட்டு எங்கு நிற்கவேண்டும்?

உத் :—*நியாயத்தில். (உங)

विद्युद्विलसितमिव किं दुर्जनसङ्गस्तथा युवतयश्च ।
कुलशीलनिष्प्रकम्पाः के कलिकालेऽपि सत्पुरुषाः ॥ २४ ॥

பிர :—மின்னலைப் போல் ஸ்திரமில்லாதது யாது?

உத் :—* துர்ஜனசங்கமும் ஸ்திரீகளும்.

---

*சாஸ்திரங்காட்டப்பட்ட வழியில். சாஸ்திரத்திற் சொல்லியபடி பிரவிருத்திக்கின் இரண்டுலக சித்தியுமுண்டாமென்பது கருத்து.

*"கீழ்மக்கள் நட்பு நீரிலெழுத்துப் போலும் நல்லோர் நட்பு கல்லிலெழுத்துப் போலுமாம்." என்றும், "ஸ்திரீகளிடத்தும் இராஜகுலங்களிலும் விசுவாசஞ் செய்யவே கூடாது" என்றும், "மடியிலிருக்கினும் ஸ்திரீயானவள் சங்கிக்கத்தக்கவளாவள்." என்றும் முதியோர் கூறியிருப்பது காண்க.

பிர :—† குலசீலங்களி னின்றும் ‡ கலிகாலத்திலும் அசையாதிருப்பவர் யார்?

உத் :—§சத்புருஷர்கள். (உச)

चिन्तामणिरिव दुर्लभमिह किं कथये चतुर्भद्रम् ।

किं तद्वदन्ति भूयः प्रविगततमसो विशेषेण ॥ २५ ॥

பிர :—சிந்தாமணியைப்போல இங்கு அடைதற்கரியது யாது?

உத் :—நான்கு *பத்திரமாம்; சொல்லுகிறேன்.

பிர :—மறுபடியும் அஞ்ஞானமொழிந்தவர்கள் எதனை விசேஷ (பேத)மாகக் கூறுகின்றனரோ அந்த நான்கு பத்திரம் யாது? (உரு)

दानं प्रियवाक्सहितं ज्ञानमगर्वं क्षमान्वितं शौर्यम् ।

वित्तं त्यागसमेतं दुर्लभमेतच्चतुर्भद्रम् ॥ २६ ॥

---

†நற்குலம் நல்லொழுக்கங்களி னின்றும்.

‡சன்மார்க்க விரோதியான கலிகாலத்திலும்.

§நல்லோர். கலிகாலம் கடத்தற் கரியதாயினும் கலிகாலம் புண்ணியப் பிரபாவத்தால் கலக்கச் சாமர்த்தியமுடைய தன்றாகலின் கலியிலும் நல்லொழுக்கமுடைய ஜீவன்முக்தர் இருக்கின்றார்கள் என்பது கருத்து.

*நலத்தை யுண்டுபண்ணுவன.

உத் :—க. *பிரியவாக்கியத்தோடு கூடியதானம், உ. †கர்வமின்றிய ஞானம், ௩. ‡க்ஷமையோடு கூடிய சௌரியம், ௪. §தியாகத்தோடு கூடிய ||பொருள். ¶இந்நான்கு பத்திரங்களும் அடைதற்கரியனவாம். (உ௬)

कः कुलकमलदिनेशः सति गुणविभवेऽपि यो नम्रः ।
किं शोच्यं कार्पण्यं सति विभवे शस्तमौदार्यम् ॥ २७ ॥

பிர :—குல மென்னும் தாமரைக்குச் *சூரியன் யாவன்?

---

*மிருதுத்தன்மை விநயத்தன்மைகளோடு கூடிய வசனத்தோடு கூடிய அதாவது வெகுமானத்தோடு கூடிய.

†யான் வித்வான் என்னும் அபிமானமின்றிய கல்வி.

‡பிறர் பிழை பொறுத்தல். சாமர்த்தியமிருக்கினும் பிறர் பிழையைப் பொறுத்துப்பின் தக்கவேறு கட்டளையால் பிரபாவத்தை வெளிப்படுத்தல் மூன்றாவது பத்திரமென்பது பொருள்.

§சற்பாத்திரத்தில் கொடுத்தல் தியாகம்.

||தனதானிய முதலியன.

¶இந்நான்கும் சித்தசுத்திவாயிலாக நிரதிசயசுகவடிவ மோக்ஷத்திற்குச் சாதனமாதலால் இவற்றைப் பத்திர மென்றார்.

*சூரியன் தாமரையை மலர்விப்பது போலத் தன் வம்சம் பிரகாசிக்கச் செய்பவன்.

உத் :—†குணமும் ‡விபவமு முள்ளபோதும் எவன் §வணக்கமுடையவனே அவன்.

பிர :—செல்வ முள்ளபோது சோகிக்கத் தக்கது யாது?

உத் :—‖கிருபணத்தன்மை.

பிர :—செல்வமுள்ளபோது புகழத்தக்கது யாது?

உத் :—¶உதாரத்தன்மை. (உஎ)

परधनहृदयहरा का सम्यक्कविता विवेकवत्ता च ।

कं न स्पृशति विपत्तिर्वृद्धस्य वचोनुवर्तिनं दान्तम् ॥२८॥

பிர :—பிறர் பொருளையும் உள்ளத்தையும் கவர்வது யாது?

உத் :—நல்ல கவித்துவமும் விவேகமுண்மையும்.

பிர :—விபத்து எவனைத் தீண்டாது?

உத் :—பெரியோர் வசனத்தையநுசரித்து நடக்கும் இந்திரிய ஜயமுடையவனை. (உஅ)

---

†சௌந்தரியம் சௌஜன்னிய முதலிய நற்குணம்.
‡செல்வம்.
§கர்வமில்லாதவன்.
‖ஈயாமை.
¶ஈகை.

कस्मै स्पृहयति कमला निर्मलचित्ताय नीतिवृत्ताय ।
त्यजति च कं सहसा द्विजगुरुदेवविनिन्दकं च सालस्यम् ॥

பிர:—லக்ஷ்மி எவனை விரும்புகின்றாள்?

உத்:—நிர்மலமான சித்தமும் நீதியான நடையு முடையவனை.

பிர:—லக்ஷ்மி எவனை விரைவில் விட்டுவிடுவாள்?

உத்:—பிராஹ்மணகுருதேவ நிந்தகனையும் சோம்பலுடையவனையும். (உகூ)

कुत्र विधेयो वासः सज्जननिकटेऽथ वा काश्याम् ।
कः परिहार्यो देशः पिशुनयुतो लुब्धभूपस्य ॥ ३० ॥

பிர:—வாசஞ் செய்யத்தக்க தெங்கே?

உத்:—சாதுக்கள் (நல்லோர்) அருகில் *அல்லது காசியில்

---

*அல்லது என்னும் சொல் நல்லோருடன் வசித்தலினும் காசிவாசம் முக்கியமானதன்றென்பதை யறிவிக்கின்றது. அது "ஜலமயமான தீர்த்தங்களும் மண்சிலைவடிவ தெய்வங்களும் அப்படிப் பவித்திரமாக்குவன வாகா. அவை காலநீட்சியால் புனிதமாக்கும். சாதுக்கள் (தமது) தரிசன மாத்திரத்தால் புனிதமாக்குகின்றனர்." என்னும் பாகவத வசனத்தாற் காணத்தக்கதாம்.

பிர:—விடத்தக்க தேசம் யாது?
உத்:—துர்ஜனர்களையுடையதும், †உலோபமுடைய அரசனுடையதும். (௨௰)

केनाशोच्यः पुरुषः प्रणतकलत्रेण धीरविभवेन ।
इह भुवने कः शोच्यः सत्यपि विभवे न यो दाता ॥२१॥

பிர:—புருஷன் எதனால் சோகத்துக்கிடமாகான்?
உத்:—மிக வணக்கமுள்ள மனைவியினாலும், நிலையான செல்வத்தினாலும்.

பிர:—இந்த வுலகில் சோகிக்கத்தக்கவன் யாவன்?
உத்:—(கொடுக்கத்தக்க) செல்வமிருந்தும் கொடாதவனெவனோ அவன். (௨௧)

किमहर्निशमनुचिन्त्यं केशवचरणौ जनेषु चञ्चलता ।
का च सभा परिहार्या हिना या वृद्धसचिवेन ॥ २२ ॥

பிர:—இரவும் பகலும் சிந்திக்கத் தக்கது யாது?
உத்:—*கேசவனது சரணங்களும், புத்திராதி ஜனத்தின் சஞ்சலத்தன்மையும்.

---

†உலோபத்தால் அநியாயஞ் செய்வானாகலின் அவனது நாடு விடத்தக்கதென்றார்.

*விஷயங்களினின்று விரக்தியடைந்து பகவானைத் தியானித்தல் சுகத்தைத் தரும் பெரும் பயனாம். அதனைச் செய்யவேண்டுமென்பது பொருள்.

பிர :—எந்தச்சபை விலக்கத்தக்கது ?

உத் :—†முதிய மந்திரி யில்லாதது. (௫௨)

ब्रूहि स्फुरति च का वा स्वभ्यस्ता निर्मला विद्या ।

प्राणादपि को रक्ष्यः कुलधर्मः साधुसङ्गश्च ॥ ३३ ॥

பிர :—செவ்வையாய் விளங்குவது யாது? சொல்லுக.

உத் :—*செவ்வையாயப்பியசிக்கப்பட்ட நிர்மலமான வித்தை.

பிர :—பிராணனைப்பார்க்கினும் இரக்ஷிக்கத்தக்கது யாது ?

உத் :—‡குல தர்மமும் §சாது சங்கமும். (௫௩)

---

†முதுமையும் சாந்தத்தன்மை சாமர்த்திய முதலிய குணம் வித்தை வயது என்பவற்றிறைலாம்.

*குரு சமீபத்தில் செவ்வையாய்ச் சங்கை சமாதான பூர்வகமாக மறுபடியும் மறுபடியும் கற்கப்பட்ட வித்தை நிர்மலமாகச் சோபிக்கும். கற்றவனுக்கும் அந்நியருக்கும் உபயோகப்படு மென்பது கருத்து.

†குலபரம்பரையாக வந்த சற் கர்மம்.

‡சாது சங்க (நல்லாரிணக்க) மின்றி எவ்விதத்தாலும் சம்ஸாரவடிவ துக்க நிவிருத்தி யுண்டாகா தென்பது உலகத்திலும் வேதத்திலும் மிகப் பிரசித்தம்.

इति कण्ठगता विमला प्रश्नोत्तररत्नमालिका येषाम् ।
ते मुक्ताभरणा इव भान्ति सुविद्वत्समाजेषु ॥ ३४ ॥

இவ்வாறு சொல்லப்பட்ட பரிசுத்தமான பிரசிஞோத்தர ரத்நமாலிகை எவர்களுக்குக் கண்டத்திருப்பதா(முகபாடமா)யிருக்கிறதோ அவர்கள் நல்ல வித்வான்களது சபையில் முத்தாபரண மணிந்தவர்போல் விளங்குவர். (௩௪)

இவ்வாறு பிரசிஞோத்தர ரத்நமாலிகை

முற்றுப்பெற்றது.

इति प्रश्नोत्तररत्नमालिका

समाप्ता ॥

ஸ்ரீ சற்குருப்யோ நம: